**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கடலூர் மாவட்டம்/கடலூர் உள்ளூர் திட்டக்குழுமம்**

உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ), கடலூர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு. எம்.ஸ்ரீதர்,பி.இ.,எம்.பிளான்.,

ந.க.எண். 524/2020/கமா நாள்- .09.2020

பொருள்: அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் - கடலூர் மாவட்டம்/வட்டம் - கடலூர் உள்ளூர் திட்டக்குழுமம் - கடலூர் பெருநகராட்சி,- குண்டுசாலை, செம்மண்டலம், மஞ்சக்குப்பம் கிராமம் - வார்டு -7, பிளாக் -22, நிலஅளவை எண்.1708/3 - 8134.00ச.மீ - பரப்பளவு கொண்ட மனையிடத்திற்கு மனையிட ஒப்புதலும் அம்மனையில் 272 குடியிருப்புகள் கட்டிடங்கள் அமையவுள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் "அனைவருக்கும் வீடு" திட்டத்தின் கீழ் கட்டப்படவுள்ள குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட வடிவமைப்பு வரைபடத்திற்கு அனுமதி அளித்தல் - தொடர்பாக.

பார்வை:

1. செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், கடலூர் அவர்களின் கடிதம் எண்.381AE(P)/Cud.Dn/2018, நாள். 20.08.2020 & 10.09.2020
2. அரசாணை (நிலை) எண்.138, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.04.06.2004.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7486/2009பிஏ2, நாள். 16.04.2009.
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21075/2009பிஏ1, நாள். 04.04.2012.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12201/2007/SPL.Cell, நாள்.28.09.2017.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.14227/2017/ சிபி, நாள்.14.12.2017.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21075/2009/பிஏ1, நாள்.27.06.2012
8. அரசாணை (நிலை) எண்.397, வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சித் துறை நாள்.12.09.1996.
9. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21705/2009 பிஏ1, நாள். 27.06.2012.
10. அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019.
11. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள். 11.09.2020.
12. மனுதாரர் கட்டணங்கள் செலுத்திய விவரம் பெறப்பட்ட நாள்.11.09.2020

---

**உத்திரவு**

பார்வை 1 -ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் கடலூர் மாவட்டம்/வட்டம், கடலூர் உள்ளூர் திட்டக்குழுமம், கடலூர் பெருநகராட்சி, குண்டுசாலை, செம்மண்டலம், மஞ்சக்குப்பம் கிராமம் , வார்டு -7, பிளாக் -22. நிலஅளவை எண்.1708/3; 8134.00ச.மீ - பரப்பளவு கொண்ட மனையிடத்தில் 272 குடியிருப்பு கட்டிடங்கள் அமையவுள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் "அனைவருக்கும் வீடு" திட்டத்தின் கீழ் கட்டப்படவுள்ள குடியிருப்பு கட்டிட மனைக்கு **A** முதல் **G** வரை என எல்லையிட்டு மனையிட ஒப்புதல் அளிக்கப்படுகிறது.அம்மனையில் குடியிருப்பு கட்டிடம் கீழ்கண்ட பரப்பளவில் அமையவுள்ளது.

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Cuddalore Division
Cuddalore-607001

| Details | - | Sq.M |
|---|---|---|
| **Type-A – 3 Blocks - 3 X 48 = 144 Units** | | |
| Ground Floor | - | 442.72 |
| First Floor | - | 442.72 |
| Second Floor | - | 442.72 |
| Third Floor | - | 442.72 |
| **Total** | - | **1770.88** |
| **1770.88 X 3** | | **5312.64** |
| **Type-B – 2 Blocks - 2 X 64 = 128 Units** | | |
| Ground Floor | - | 589.91 |
| First Floor | - | 589.91 |
| Second Floor | - | 589.91 |
| Third Floor | - | 589.91 |
| **Total** | - | **2359.64** |
| **2359.64 X 2** | | **4719.28** |
| **Grand Total** | - | **10031.92** |

வான் நோக்கிய திறவிட பரப்பு (Open space Reservation Area) - 844.23 ச.மீ - 10.37%

332 இரு சக்கர வாகன நிறுத்துமிடம் (Two Wheelers Parking - 332Nos)

8134.00 ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில் மேற்கண்டுள்ள விவரத்துடன் கட்டப்படவுள்ள அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்திற்கு, **11(1-3 தாள்)/2020/கஉதிகு** என எண்ணிட்டு **14.09.2020 முதல் 15.09.2025** வரையிலான காலத்திற்கு கீழ் காணும் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. உத்தேச கட்டுமானத்திற்கு Solar Water Heating system அமைக்கப்படவேண்டும்.
2. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்படவேண்டும்.
3. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செயதல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்படவேண்டும்.
4. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண். 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்படவேண்டும்.
5. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளிவரும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
6. Site Plan –ல் காட்டப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

27/10

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Cuddalore Division
Cuddalore-607001

65

117

7. உத்தேச கட்டுமானத்தில் விதி படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றம் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.
8. அரசாணை எண். 341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.11.2004-ன்படி செப்டிக் டேங்கில் 'U' Trap அமைத்தல் வேண்டும்.
9. சுற்றுசூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்படவேண்டும்.
10. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமாணங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
11. The Applicant/developer, Government Departments and also the architects/Registered Enginners and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
12. மத்திய மற்றும் மாநில அரசு துறையினிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
13. பார்வை -3ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி "The Tamil Nadu Government in G.OMs.No112, Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the TamilNadu Real Estate (Regulation and Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, ir invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority".

<u>சிறப்பு நிபந்தனைகள்:-</u>

1. **உதவி இயக்குநர்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கடலூர் நாள்.07.09.2020 , அவர்களின் களஆய்வின் தெரிவிக்கப்பட்டவாறு அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.**
2. **நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், கடலூர் அவர்களின் கடிதம் எண்.381AE(P)/Cud.Dn/2018, நாள். 10.09.2020, அவர்களின்கடிதத்தில் தெரிவித்துள்ளபடி அனைத்து நிபந்தனைகளையும் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.**
3. As per Ministry of Environment, Forest and Climate change Notifiction, dated.22.12.2014."The buildings shall ensure sustainable environmental Management solid and liquid waste Management rain water harvesting and may use recycled materials such as fly ash bricks".
4. As per G.O(Ms)No.161, H &UD Department, dated.26.06.2013"OSR portion is earmarked as OSR and kept open to sky without any construction.
5. நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரிலுள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
6. கட்டுமாணங்கள் நடைபெறும் இடத்தில் பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி தளப்பரப்பு விகிதம் (FSI) திறவிடங்கள் (Setbacks), வாகன நிறுத்தம் ஆகியவை குறிப்பிட வேண்டும்.

27/10

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance
Cuddalore Division
Cuddalore-607001

34

7. G.O(Ms)No.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2010-ன்படி தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
8. கட்டிடம் கட்டப்படும்போது அரசுஅங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.
9. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structuralsatability aspects including the safety during the construction which are covered under Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant /developer and also thearchitects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
10. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequancy of the foundations.
11. The Provisions in the G.O(Ms)No.17, Housing and Urban Development (UD4(3)) Department dated:05.02.2016 relating to installation and use or solar Energy system should be followed.

பார்வை 7,8, 9,10-ல் காணும் அரசாணையின் படி பார்வை 11-ல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக மனுதாரரிடம் உத்தேச அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் அனுமதி தொடர்பாக கட்டணங்கள் கோரப்பட்டு, பார்வை 12 -ல், மனுதாரரின் கடிதம் மூலம் மனுதாரர் கட்டணங்கள் செலுத்தப்பட்டு அசல் செலுத்து சீட்டு (Original Challan) பெறப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் 2 தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் இறுதி ஒப்புதலுக்கு ஆணையாளர், கடலூர் பெருநகராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஆணையாளர், கடலூர் பெருநகராட்சி அவர்கள் மனுதாரருக்கு உத்தரவு வழங்குமாறும் அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

உறுப்பினர் செயலர்,
கடலூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
கடலூர்.

**இணைப்பு-**
ஒப்பப்பட்ட வரைபட தொகுப்புகள் -2.

**பெறுநர்**
ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி,
கடலூர்.
**நகல்**
செயற்பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,,
கடலூர் பிரிவு,
எண்.11, ஆற்றங்கரை தெரு,
புதுப்பாளையம், கடலூர்-1

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Cuddalore Division
Cuddalore-607001

AE(P) AHP 24/10/20

# கடலூர் நகராட்சி

## கட்டிட அனுமதி உத்தரவு

க.வி.எண்:093/CP/20-21/0000629 உ.ஆணை:093/BL/2020/00177 நாள் :22/10/2020
பி.ஏ எண்:093/BPA/2020/00377

**பொருள்:** கட்டிட அனுமதி கடலூர் நகராட்சி, கிராமம்:, நகரளவு எண்: 1708/3, தொகுதி: 7, பகுதி: 22, கதவு/மனை எண்:1/16 கட்டிட அனுமதி வழங்கி உத்தரவிடுதல்
**பார்வை :** தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் என்பவரது 18-Oct-2020 ம் தேதிய விண்ணப்பம். மனையின் பரப்பளவு-87554.000 சதுர அடி

| S.No | Build Floor Name | UsageName | BuildupSqft |
|---|---|---|---|
| 1 | Ground Floor | RESIDENTIAL | 26995.000 |
| 2 | First Floor | RESIDENTIAL | 26995.000 |
| 3 | Second Floor | RESIDENTIAL | 26995.000 |
| 4 | Third Floor | RESIDENTIAL | 26995.000 |
| | | Total Sqft | 107980.000 |

**செலுத்தப்பட்ட கட்டணங்களின் விவரம் பின்வருமாறு**

| S.No | கட்டணம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மழை நீர் சேகரிப்பு முன் வைப்புத் தொகை | 2000.00 |
| 2 | விளம்பரப்பலகை வைப்பு | 10000.00 |
| 3 | ஆய்வுக் கட்டணம் | 20800.00 |
| 4 | கட்டிட உரிமையாணைக் கட்டணம் | 682800.00 |
| | Total Amount | 715600.00 |

| Receipt No | Receipt Date | Amount | Payment Mode |
|---|---|---|---|
| 093/001/01/20-21/0003987 | 21/Oct/2020 | 715600.00 | Cheque |

| Fees Description | DD/Challan No | DD/Challan Date | Amount |
|---|---|---|---|
| Labour welfare fund | Will be paid by TNSCB | 21/Oct/2020 | 0.00 |
| Development Charge | 10477774262 | 11/Sep/2020 | 120000.00 |

**உத்தரவு :**

1920-ம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 200, 201-வது பிரிவின் கீழ் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமம்:,கதவு/மனை எண்:1/16, குண்டு சாலை ரோடு, GUNDUSALAI, MANJAKKUPPAM , தொகுதி: 7, பகுதி: 22,நகரளவு எண்: 1708/3, உள்ள இடத்தை அங்கீகரித்து வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மாறுதல் கட்டிடம்/ கூடுதல் கட்டிடம்/ புதுப்பித்து கட்டிக்கொள்ள கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின் ஒரு தொகுப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கட்டிடம் கட்ட குறித்த இடத்தில் கட்டிடத்தை வரைபடத்தில் வரைந்துள்ளபடி/ திருத்தப்பட்டபடி கீழ்கண்ட கட்டுபாடுகளுக்கு 22/10/2020 தேதியில் இருந்து 21/10/2025 தேதிக்குள் கட்டிக்கொள்ள உரிமை ஆணை வழங்கப்படுகிறது.

22/10/2020

பெறுபவர்,

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்
1/16,குண்டு சாலை ரோடு, GUNDUSALAI,
MANJAKKUPPAM

ஆணையாளர்
கடலூர் நகராட்சி

22/10/20

நகல் : நகரமைப்பு ஆய்வர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதியை தெரிவிக்க
நகல் : வருவாய் ஆய்வாளர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் கட்டிடத்திற்கு வரிவிதித்து வரிவிதிப்பு எண்ணை தெரிவிக்க
நகல் : வருவாய் பிரிவு எழுத்தர்.

27/10

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Cuddalore Division
Cuddalore-607001

| CONDITIONS / நிபந்தனைகள் | |
|---|---|
| S.No. | Condition Name |
| 1 | இந்த அனுமதி 5 வருட காலத்திற்கு மட்டும் அமுலில் இருக்கும். இந்த கால அளவிற்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படவில்லையானால் புதியதாக மனு செய்து உரிமக் கட்டணம் செலுத்தி அனுமதி பெறப்படவேண்டும். |
| 2 | அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படி கட்டிடம் கட்டப்பட வேண்டும். |
| 3 | ஆணையாளரிடமிருந்து எழுத்து மூலமான அனுமதி பெறாமல் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து எந்தவிதமான மாறுதலும் செய்யக் கூடாது. |
| 4 | அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை கட்டிட வேலைகள் நடக்கும் இடத்தில் வைத்திருந்து நகராட்சி/மாநகராட்சி ஆய்வு அலுவலர்கள் கேட்கும் போது காண்பிக்கப்பட வேண்டும். |
| 5 | பொதுத் தெருவை ஒட்டிக் கட்டப்படும் மதில் சுவர்களின் உயரம், தெரு மட்டத்திலிருந்து 5/8 அடிக்கு மேற்படக் கூடாது. கதவுகள் தெருப் பக்கம் திறக்கப்படக் கூடாது. தெருக்களின் சந்திப்பிலுள்ள முனைகள் வளைவுபடுத்த வேண்டும். |
| 6 | சாலை ஓரங்களில் ஆக்கிரமிப்பு செய்தல் கூடாது. மனுதாரரின் மனைக்கு செல்வதற்காக கட்டப்படும் படிகள் அவர்கள் சொந்த இடத்திலேயே கட்டப்பட வேண்டும். |
| 7 | அரசு அல்லது நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் எந்த ஆக்கிரமிப்பும் செய்தல் கூடாது. |
| 8 | அரசாணை எண் 341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.1) துறை நாள் 03.11.2004ன்படி செப்டிக் டேங்கில் 'U' Trap அமைக்கப்பட வேண்டும். |
| 9 | கிணற்றை சுற்றிலும் 3 அடி உயரத்திற்கு குறையாமல் கைப்பிடிச் சுவர் கட்டப்படுவதுடன் கிணற்றை சுற்றி தளவரிசை கட்டப்பட வேண்டும். |
| 10 | ஜன்னல்களின் அளவுகள் அதன் பிரேம்கள் நீங்கலாக இருக்க வேண்டும். |
| 11 | கழிவுநீரைப் வெளிப்படுத்த தேவையான வடிகால் வசதிகள் கட்டப்படுவதுடன் தண்ணீர் தங்காமல் தடுக்கப்பட வேண்டும். |
| 12 | சமையலறையில் புகையினை வெளியேற்றும் விசிறி (Exhaust Fan) அமைக்கப்பட வேண்டும். |
| 13 | நகராட்சி/மாநகராட்சி துப்புரவு அலுவலர்/ஆய்வரிடமிருந்து துப்புரவு சான்றிதழ் பெறுமுன்னர் கட்டிடத்தை பயன்படுத்துதல் கூடாது. |
| 14 | கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதி அல்லது கட்டிடம் பயன்படுத்துகிற தேதி ஆகியவற்றில் எது முன்கூட்டி நடந்ததோ அந்த தேதியை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட அல்லது கட்டிடம் பயன்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் முடிக்கப்பட்ட கட்டிடத்தின் இரண்டு வரைபடங்களுடன் நிர்வாக அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டும். |
| 15 | மழைநீர் சேகரிப்பு திட்டம் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை (நிலை) எண் 138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002ன்படி அமைக்கப்பட வேண்டும். |
| 16 | வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம். |
| 17 | கட்டிடம் கட்டப்படும் இடத்தின் முன்புறம் கட்டிட உரிமையாளர் பெயர் கட்டிட அனுமதி எண், அனுமதி வழங்கிய தேதி அனுமதிக்கப்பட்டுள்ள காலம் அனுமதி நீடிப்பு காலம் கட்டிடம் கட்டும் ஒப்பந்ததாரர் பெயர் ஆகிய விபரங்களை வெள்ளை நிற எழுத்தால் எழுதி வைக்கப்பட வேண்டும். |
| 18 | அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்திற்கு மாறுதல் செய்து கட்டப்படும் கட்டிடங்களுக்கு / அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களுக்கு மாநகராட்சி சட்டப்பிரிவு 283ன்படி அரையாண்டு ஒன்றுக்கு 100 சதுர அடிக்கு ரூ. 50 விதம் வசூலிக்கப்படத்தக்கதாகும். |
| 19 | அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளவாறுதான் கட்டிடம் கட்டப்பட வேண்டும். மாறுதலாகவும், விதிகளுக்கு முரணாகவும் கட்டும் கட்டிடத்திற்கு மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்க இயலாது. மேலும், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57ன் கீழ் கட்டிடத்தினை பூட்டி சீல் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 20 | அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களுக்கு மாறுதல் செய்ய அவசியம் எனில் அதற்காக திருத்திய வரைபடங்கள் அனுப்பி புது உத்திரவு பெற்ற பின்னரே கட்டிட வேலை ஆரம்பிக்க வேண்டும். இதில் தவறியவர்கள் மீது மாநகராட்சி சட்டப்பிரிவு 447ன்படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும் அல்லது மாநகராட்சி சட்டப்பிரிவு 296ன் படி மாநகராட்சி பணியாளர்களால் இடித்து தள்ளப்படும். |
| 21 | ஏற்கனவே உள்ள வீடுகள் மாற்றி கட்டுவதற்கு முன் மின் இணைப்புகள் இருப்பின் அதை அப்புறப்படுத்த வேண்டும். |
| 22 | கட்டிட சம்மந்தப்பட்ட கல், மண் முதலியவற்றை தெருவில் போடக்கூடாது. |
| 23 | கட்டிடப்பணி நடைபெறும் பொழுது பணி செய்யும் வேலையாட்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் பாதுகாப்பு குறித்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மனுதாரர் சொந்த பொறுப்பில் மேற்கொள்ள வேண்டும். |
| 24 | கட்டுமானப் பொருட்கள் தரம், கட்டமைப்புகள் ஆகியவற்றிற்கு பணி மேறகொள்ளும் பொறியாளரும் கட்டிட உரிமையாளரும் பொறுப்பாவார்கள். |

27/
EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Cuddalore Division
Cuddalore-607001